(9) 198601

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1986 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்டம்

*[1986, ஏப்பிறல் மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1986 ஏப்பிறல் மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

# 1986 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்டம்

[1986 ஏப்பிறல் மாதம் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 10/84
1647

## அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. 1983 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— 283 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை (4) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(3) அத்தகைய பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், திறைசேரிச் செயலாளர் காலத்துக்குக் காலம் பணிக்கக்கூடிய அத்தகைய ஊதியத்தைக் கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் :

ஆயின் அத்தகைய ஊதியமானது மாதமொன்றுக்கு நூறு ரூபாவை அல்லது மாதமொன்றின் ஏதேனும் பகுதிக்கு விகிதாசாரமான பணத்தொகையை விஞ்சுதல் ஆகாது.".

3. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின் அத்தகைய ஊதியமானது மாதமொன்றுக்கு எழுநூற்றைம்பது ரூபாவை அல்லது மாதமொன்றின் பகுதிக்கு விகிதாசாரமான பணத்தொகையை விஞ்சுதல் ஆகாது.".

ஏ 088208—2,825 (01/86)